

சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் திருத்தணி சுப்ரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரி உள்ளது. இதில் 3000 – ற்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு படித்து வருகின்றனர் இந்நிலையில் தேசிய நெடுஞ்சாலை 4 வழி சாலையாக விரிவுபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது சாலைப் பணிகளில் ஒரு பகுதியாக அரசு கலைக்கல்லூரிக்கு அரை கிலோ மீட்டர் தூரத்தில் சுரங்கப்பாதை அமைக்கப்படுவதால் கல்லூரி மாணவர்கள் சுற்றிக்கொண்டு வந்து கல்லூரிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே கல்லூரி பேருந்து நிறுத்தம் அருகே சுரங்கப்பாதை அமைக்க திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.விடம் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை ஏற்று உடனடியாக தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளிடம் நடத்திய பேச்சுவார்த்தை ஏற்கப்பட்டு மாணவர்கள் வசதிக்காக கல்லூரி பகுதியில் சுரங்கப்பாதை அமைத்து தரப்படும் என்று தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் உறுதி அளித்ததின் பேரில் மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர் .

## 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. 17 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை வருகிற 24.12.2025 அன்று காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள 17 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் வருகிற 24.12.2025 புதன்கிழமை, காலை 10 மணியளவில், கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அ.தி.மு.க. வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| வ. எண் | ஒன்றியம் பெயர் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் | ஒன்றிய கழக செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஏற்பாட்டாளர்கள் |
|---|---|---|---|
| 1 | திருவலாங்காடு கிழக்கு | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திருவாலங்காடு | எஸ்.மகாலிங்கம் |
| 2 | திருவலாங்காடு மேற்கு | கனகம்மாசத்திரம், பழைய காவல் நிலையம் அருகில் | எம்.கூளுர்.ராஜேந்திரன் |
| 3 | கடம்பத்தூர் கிழக்கு | மணவாளநகர் அண்ணா சிலை அருகில் | க.அரிகிருஷ்ணன் |
| 4 | கடம்பத்தூர் மேற்கு | பேரம்பாக்கம் அண்ணா பேருந்து நிலையம் அருகில் | மோ.ரமேஷ் |
| 5 | பூண்டி மேற்கு | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பூண்டி | தா.மோதிலால் |
| 6 | கடம்பத்தூர் மத்தியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கடம்பத்தூர் | ஏ.பிரகாஷ் ஞானஒளி |
| 7 | திருத்தணி கிழக்கு | கார்த்திகேயபுரம் ஊராட்சி திருத்தணி கிழக்கு கட்சி அலுவலகம் அருகில் | பா.ஆர்த்தி ரவி |
| 8 | திருத்தணி மேற்கு | புச்சிரெட்டிபள்ளி திருத்தணி மேற்கு கட்சி அலுகலகம் அருகில் | என்.கிருஷ்ணன் |
| 9 | திருத்தணி வடக்கு | சிவ்வாடா அரசு உயர்நிலைப் பள்ளி அருகில் | ஏ.எல்.விஜயகுமார் |
| 10 | திருத்தணி தெற்கு | கே.ஜி.கண்டிகை,கனராவங்கி அருகில் | கே.ராஜேந்திரன் |
| 11 | இரா.கி.பேட்டை கிழக்கு | இந்தியன் வங்கி எதிரில் இரா.கி.பேட்டை | பா.சம்பத் |
| 12 | இரா.கி.பேட்டை மேற்கு | சின்னநாகபூண்டி, பஜார் மெயின் ரோடு அருகில் | மா.இரகு |
| 13 | இரா.கி.பேட்டை வடக்கு | அம்மையார்குப்பம் இந்தியன் வங்கி எதிரில் | சி.என்.சண்முகம் |
| 14 | இரா.கி.பேட்டை தெற்கு | இந்தியன் வங்கி எதிரில் அஸ்வரேவந்தபுரம் | பெ.பழனி |
| 15 | பள்ளிப்பட்டு வடக்கு | சோளிங்கர்ரோடுபள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய அலுவலகம் அருகில் | சி.ஜெ.சீனிவாசன் |
| 16 | பள்ளிப்பட்டு தெற்கு | ஜங்காலப்பள்ளி | ஜி.ரவீந்திரா |
| 17 | பள்ளிப்பட்டு மத்தியம் | அத்திமாஞ்சேரிப்பேட்டை பள்ளிப்பட்டுமத்திய ஒன்றிய அலுவலகம் | பி.டி.சந்திரன் |

மேற்கண்ட கண்டன ஆர்ப்பாட்டங்களில் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன்., தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன்., தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன்.,கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.இ.டி.ஆதிசேசன் கழக நெசவாளர் அணி துணைத்தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம் திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர் மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர். இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கூஷிளைகழக செயலாளர்கள், கிளைபிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகமுகவர்கள், கழகமுன்னோடிகள் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு. நம்முடைய கழக நிர்வாகிகளுக்கு, கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.





சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பாடியநல்லூர் ஊராட்சி வி.எம்.ஜி.பேலஸ் திருமணமண்டபத்தில் மாபெரும் இரத்த தான முகாம் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணகாரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து இரத்த தானம் செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் கே.எம்.துரைவேல், செ.அரசு, பா.சேகர், பொன் கோதண்டன், இளைஞரணி அமைப்பாளர் ஜெகன், மாணவர் அணி அமைப்பாளர் கௌதம், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் 6 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வேண்டுகோள்!



100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அ.தி.மு.க. வைவும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை வருகிற 24.12.2025 (புதன்கிழமை) அன்று காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள பூவிருந்தவல்லி கிழக்கு, பூவிருந்தவல்லி மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் வடக்கு மற்றும் எல்லாபுரம் மத்தியம் உள்ளிட்ட 6 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் வருகிற 24.12.2025 புதன்கிழமை. காலை 10 மணியளவில், கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க. அரசையும். அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| ஒன்றியம் | தலைமை | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் ஒன்றிய செயலாளர் | ஆ.கிருஷ்ணசாமி பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் | S காஞ்சனா சுதாகர் பொதுக்குழு உறுப்பினர் | வரதராஜபுரம் |
| பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | D.தேசிங்கு ஒன்றிய செயலாளர் | ம.ராஜி மாவட்ட அவைத் தலைவர் | எம்.முத்தமிழ் செல்வன் பொதுக்குழு உறுப்பினர் | நடுகுத்தகை |
| திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம்ஆனந்த் ஒன்றிய செயலாளர் | K.J.ரமேஷ் தலைமை செயற்குழு உறுப்பினர் | த.எத்திராஜ் பொதுக்குழு உறுப்பினர் | செவ்வாப்பேட்டை |
| எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | தங்கம் முரளி ஒன்றிய செயலாளர் | V.J.சீனிவாசன் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.காயத்திரி ஸ்ரீதரன் மாவட்ட துணைச் செயலாளர் | கு.விமல் வர்ஷன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர் பொதுக்குழு உறுப்பினர் | தாமரைப்பாக்கம் |
| திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | R.ஜெயசீலன் ஒன்றிய செயலாளர் | S ஜெயபாலன் மாவட்டதுணை செயலாளர் | J. மகாதேவன் பொதுக்குழு உறுப்பினர் V குமார் பொதுக்குழு உறுப்பினர் | காக்களூர் |
| திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | டி.முரளி கிருஷ்ணன் ஒன்றிய பொறுப்பாளர் | பா. நரேஷ் குமார் மாவட்ட பொருளாளர் | கே.சுரேஷ்குமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் | வெள்ளியூர் |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை அந்தந்த ஒன்றியங்களின் கழகச் செயலாளர்கள், அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும். நம்முடைய கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 304 வது நாள்!

### வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை, டிச.21-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 304 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (20.12.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95 தாந்தோணி அம்மன் கோயில் தெரு, 2) வட்டம் 95 அ புதிய ஆவடி சாலை, சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி. கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, தமிழ் நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன். எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க. சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ. முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே. பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

## பி.கோபி தலைமையில் – இராயபுரம் மேற்குப் பகுதி

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதல்வர் பிறந்தநாள்! நல உதவிகள்!

### ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி – ஐட்ரீம் மூர்த்தி – டாக்டர் சுபேர்கான் வழங்குகின்றனர்!

*சென்னை, டிச.21-*

*சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (21.12.2025 ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு மேல் எஸ். என்.நகர் வால்டாக்ஸ் ரோட்டில் நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சிக்கு இராயபுரம் மேற்குப் பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பி.கோபி தலைமை வகிக்கிறார்.*

*வ.பெ.சுரேஷ், ஜெ.கௌரீஸ்வரன், சபரி பி.செந்தில்குமார், பா.வேளாங்கண்ணி, எம்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், இரா.பாலன், எம்.கே.இஸ்மாயில், கு. ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், எஸ்.ரமேஷ், ஜி.எஸ்.முருகன்,ஏ.அன்வர், இ.மதிவாணன், பி.ஆதிபிரகாஷ், ஆர். வாசு, இ.ரகு, கே.கோபி, டபிள்யூ ஏ. சார்லஸ், க.ஜெயசீலன், எம்.செந்தில்குமார், எஸ்.ரமேஷ், ஆர்.கிருஷ்ணன், ஜெ.குணாளன், பி.ரூபாவதி, எஸ்.சங்கர், எஸ். அசோக், ஏ.சாந்தகுமாரி, எம். ஜானகிராமன், டி.தன்ராஜ், பி.சி.கோட்டி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*எம்.கலைவாணன், எல். ராஜா, ஏ.பி.அரசு, கே.புருஷோத்தமன், ஏ.அகஸ்டின், எம்.பரத்குமார், டி.ஆர்.நந்தா ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.*

*விழாவில் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.டி.சேகர், கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம். எல்.ஏ. , டாக்டர் அ.சுபேர் கான் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்.*

*இதில் தா.இளைய அருணா, ந.மனோகரன், பி.டி.பாண்டிசெல்வம், என். மருதுகணேஷ், மு.கோபி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், க. நாகம்மை, வி.தயாளன், நா. சண்முகம், கி.ராஜேந்திரன், வே.சிவக்குமார், ப. சோமசுந்தரமூர்த்தி, ரெயின்போ என். விஜயகுமார், ஆர்.வி.லட்சுமி வேணு, பா.சுரேகா, ஜெயா வினோ ஸ்ரீதர், லியோ சுரேஷ், வெ.க.சத்தியநாராயணன், பி.செந்தில்குமார், கார்த்தி செங்குட்டுவன், என். தீனதயாளன், கே.மதன், பா. கதிரவன், டி.லெனின், கே.ஆர்.பிரபு, ஏ.தேவன்பு, டி.தினேஷ்குமார் பங்கேற்கின்றனர்.*





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் எல்.எண்டத்தூர் ஊராட்சியில் வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம் மற்றும் பாக முகவர்கள், நிலைக் குழு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ஜீ. தம்பு தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எம். டி.ஆர்.சாரதி மணிமாறன் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.நாராயணன், ஒன்றிய நிர்வாகிகள் சிவபெருமான், தேவு, வேதாச்சலம், பாண்டுரங்கன், மஞ்சுநாதன், கோகுல், பரமசிவம், கோபி, மாவட்ட கவுன்சிலர் மாலதி, சரத்குமார், சந்திரசேகர், சித்ரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.